8th March 1968]

திரு. என். ஆர். தியாகராஜன் : தலைவரவர்களே, இது சம்பந்தமாக. அந்த சந்தேகிக்கப்பட்ட போலீசார் மீது என்ன நடவடிக்கை எடுக்கப் பட்டது ? இல்லாவிட்டால் இனிமேலாவது என்ன நடவடிக்கை எடுக்கப் படும் ?

மாண்புமிகு திரு. வி. ஆர். நெடுஞ்செழியன் : ரெவின்யூ டிவிஷனல் ஆபீசர் அவர்கள் விசாரித்த வகையில், இரண்டு போலீஸ்காரர்கள் அந்த மணி என்பவருடன் இருந்தார்கள் என்று சாட்சிகள் சொன்ன காரண மாக உடனடியாக அவர்களை சஸ்பென்ட் செய்து வைத்திருக்கிருர்கள். மாவட்ட ஆட்சித் தலைவர் இப்போது மேற்கொண்டு விசாரணை நடத்திக் கொண்டு வருகிருர்.

Workers of Ambattur Tube Investments Factory.

* 213 *Q*—THIRU N. R. THIAGARAJAN : Will the Hon. the Chief Minister be pleased to state :—

(*a*) whether it is a fact that there was a clash between the workers of the Madras Ambattur Tube Investments Factory resulting in serious injurles to Desingh, Dhasarathan, and Venkatesan ;

(*b*) whether the police have initiated criminal proceedings against those who assawited them ;

(*c*) if not, the reason therefor ?

அம்பத்தூர் டியூப் இன்வெஸ்ட்மெண்டல் தொழிற்சாலே தொழிலாளர்கள்.

திரு. என். ஆர். தியாகராஜன் : மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் :—

(அ) சென்னை அம்பத்தூர் டியூப் இன்வெஸ்ட்மெண்ட்ஸ் தொழிற் சாலேயில் தொழிலாளருக்குள் மோதல் ஏற்பட்டு தேசிங், தசரதன், வெங்கடேசன் ஆகியோர் படுகாயமடைந்தனரா ?

(இ) இவர்களை தாக்கியவர்கள் மீது போலீசார் வழக்குத் தொடர்ந்துள்ளனரா ?

(உ) இல்லேயென்ருல், யாது காரணம் ?

மாண்புமிகு திரு. வி. ஆர். நெடுஞ்செழியன் : (on behalf of the Hon. the Chief Minister: (அ), (இ) ஆம். இந்த விஷயம் நீதி மன்றத்தில் இருக்கிறது.

(உ) வினவிற்கு இடமில்லே.

திரு. என். ஆர். தியாகராஜன் : தொழிற்சாலேகளில் இத்தகைய அடிதடி சம்பவங்கள் நடக்காமல் இருக்க முன் ஏற்பாடு ஏதாவது அரசாங்கம் செய்யுமா ? அடிக்கடி இத்தகைய சம்பவங்கள் ஏற்பட்டுக் கொண்டிருக்கின்றன. அதைத் தடுக்க என்ன ஏற்பாடு செய்யப்பட்டிருக் கிறது ?

மாண்புமிகு திரு. வி. ஆர். நெடுஞ்செழியன் : தொழிற்சாலே தகராறுகள் ஏற்படாமல் தடுப்பதற்கு ஆங்காங்கு வெல்பேர் ஆபீசர்கள், போன்ற பல்வேறுபட்ட அதிகாரிகள் இருக்கிருர்கள். கலவரம் ஏற்படக் கூடிய இடங்களில், கோவை போன்ற இடங்களில், போலீஸ் பந்தோபஸ்து செய்யப்பட்டிருக்கிறது. இவைகளைத் தடுக்க என்னென்ன முறைகள் மேற் கொள்ள வேண்டுமோ அவைகள் செய்யப்பட்டிருக்கின்றன. எதிர் காலத் தில் என்னென்ன முறைகளை மேற்கொள்ளவேண்டுமோ, இந்த நிகழ்ச்சி களைத் தடுப்பதற்கு, அவைகள் மேற்கொள்ளப்படும்.

[8th March 1968

திரு. எம். எத்திராஜுலு : சென்னையில் சிம்சன் தொழிற்சாலையில் இரு தொழிற்சங்கங்கள் இருக்கின்றன. அவைகளுக்கிடையே மோதல் ஏற்பட்டு, இரண்டு பேர்களுக்கு கத்திக் குத்தும், 26 பேர்களுக்கு காயமும் ஏற்பட்டிருக்கிறது. அது சம்பந்தமாக அமைச்சர் அவர்களுக்கு மனுவும் கொடுத்திருக்கிறார்கள். அதன் மீது போலீசாரால் என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது ?

MR. CHAIRMAN : I think the Hon. Minister, need not answer it.

Power from Neyveli.

* 214 Q—**THIRU N. R. THIAGARAJAN :** Will the Hon. the Minister for Education and Industries be pleased to state :—

(*a*) the reasons to why the Medras state is not fully whilising the power from Neyveli.

(*b*) the price at which the Neyveli power is bought by the State and;

(*c*) whether it is a fact that the price which the Madras State pays is very low and that the Government of India inours a loss as a result there of ?

நெய்வேலி மின்சாரம்.

திரு. என். ஆர். தியாகராஜன் : மாண்புமிகு கல்வி, தொழில் அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்கவேண்டு கிறேன் :—

(அ) நெய்வேலி மின்சாரத்தை நாம் பூரணமாக பயன்படுத்தாது காரணம் என்ன ?

(இ) நெய்வேலி மின்சாரத்தை நாம் என்ன விலைக்கு வாங்கு கின்றோம் ?

(உ) நாம் கொடுக்கும் விலை குறைவானதென்பதும் அதனால் மத்திய அரசுக்கு நட்டம் என்று கூறப்படுவதும் சரியா ?

மாண்புமிகு திரு. வி. ஆர். நெடுஞ்செழியன் : (அ) கடந்த தென் மேற்குப் பருவத்தில் நீர் கொள் பகுதிகளில் பொதுவாக மன நிறைவு அளிக்கும் வகையில் மழை பெய்தது. இதனால் நீர்வரவு கணிசமாயிருந் தது. நீலகிரியிலிருந்து பெருகி வழிந்தோடிய நீரும், பெரியாறு, பாப நாசம், மேட்டூர் சர்க்கார்பதி ஆகிய இடங்களில் கட்டாயமாகப் பாசனத் திற்கு விடப்படும் நீரும், மின்சக்தி உற்பத்தி செய்வதற்காக பயன்படுத்தப் பட்டன. நல்ல மழை பெய்ததால், வேளாண்மை விசையேற்றங் களுக்காகப் பயன்படுத்தும் மின் சக்தியின் அளவும் குறைந்துவிட்டது. எனவே 1967 ஜூலையிலிருந்து ஆகஸ்ட் வரையில் நாம் நெய்வேலி மின் சக்தியை முழு அளவில் பயன் படுத்தவில்லை. நெய்வேலியிலிருந்து திங்கள் தோறும் ஓரளவு மின்சக்தியை உறுதியாகப் பெற மாநில மின்சார வாரியம் இப்போது நெய்வேலி பழுப்பு நிலக்கரி கார்ப்பொரேஷனுடன் ஒப்பந்தம் ஒன்று செய்து கொண்டுள்ளது.

(இ) ஒரு அலகு (Unit) 5.2 காசு.

(உ) மின் சக்தித் துறையில் 1966–67-ல் இழப்பு ஏற்பட்டுள்ளதாக நெய்வேலி பழுப்பு நிலக்கரி கார்ப்பொரேஷன் தெரிவித்துள்ளது. வாங்கும் விலையை மாற்றியமைப்பது குறித்துத் தமிழ்நாடு அரசாங்கம், நெய்வேலி பழுப்பு நிலக்கரி கார்பொரேஷன், மாநில மின்சார வாரியம் ஆகியோர் விவாதித்து வருகின்றனர்.